“இந்த கேபல் கார் திட்டம் அமைப்பு பாதுகாப்பானது என்ற வாதம் ஒரு கருத்து கணிப்பு மட்டுமே. இயற்கை பேரிடர்கள் மட்டுமே இந்த இடத்தை ஆக்கிரமிக்கும். இந்த புக்கிட் லாருட் மலைப்பிரதேசம் அழிய போவதைப் பார்த்துக் கொண்டிருக்க போகின்றோமா.?

## பேரா மாநில அரசாங்கத்திடம் உறுதியாக கூறுங்கள் “ புக்கிட் லாருட் மலைப்பிரதேசத்தை அழித்து விடாதீர்கள்”



## இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்க்கையை வாழ்வோம்





டத்தோ மாரிமுத்து நாடேசன் தலைவர் மலேசிய பயனீட்டாளர் சம்மேளனம்



# புக்கிட் லாருட் மலையை அழிக்க வேண்டாம்

அனைத்து தைப்பிங் பகுதியில் வாழும் மக்களும் புக்கிட் லாருட் மலையைதான் நீர் வளத்திற்காக சார்ந்து உள்ளனர். இந்த புக்கிட் லாருட் மலையில் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டு திட்டங்களால், அந்தப் பகுதியில் தூய்மையான நீர் தொடர்ந்து கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்படும்.

*Disokong oleh:*

FOMCA

ERA CONSUMER MALAYSIA

FORUM AIR MALAYSIA

PCA
PERSATUAN PENGGUNA PERAK
PERAK ASSOCIATION OF CONSUMERS

# ஏன் நாம் இந்த கேபல் வண்டி திட்டத்தை எதிர்க்க வேண்டும்

**1) புக்கிட் லாருட் மலைப்பகுதி முக்கிய நீர்த்தளமாகும்**

- பேரா மாநில நீர் இலாகாவின் புள்ளிவிபர படி 21.53 கிலோ மீட்டர் சதுர பரப்பளவு பகுதி நீர் தளமாக பயன்படுத்தப் படுகிறது.
- இந்தப் பகுதியிலோ அல்லது அருகில் உள்ள பகுதியிலோ மேற்கொள்ளப் படும் மேம்பாட்டு திட்டங்களால், அந்த பகுதியில் உள்ள நீர் வளத்திற்கும் மற்றும் இயற்கை இயலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.
- இதற்கு முன்னர் இங்கு நிறுவப்பட்ட தொலைத்தொடர்பு கோபுர திட்டத்தினால், இதனை சுற்றிலும் நீர்வளத்தில் சேறு கலந்து தூய்மைகேடு ஏற்பட்டது.
- இந்தப் பகுதியில் மேம்பாட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டால், வட பேரா பகுதியில் குடிநீர் சிக்கல் ஏற்பட வாய்ப்புண்டு.

**2) உறுதியற்ற/நிலையற்ற மலை சரிவு**

- புக்கிட் லாருட் பகுதியில் மேற்கொள்ளப் பட்ட ஆய்விபடி, ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய 150 ஏக்டர் அளவு மணல் குறைகின்றது. இந்த ஆய்வின் படி புக்கிட் லாருட் பகுதி கட்டட அமைப்புக்கு ஏற்றதல்ல என்பது உண்மையாகின்றது.
- தேசிய நிலச்சரிவு ஆய்வு அமைப்பின் (National Landslide Research Centre) இயக்குநரின் கருத்தின் படி “ நிலச்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் மிகுந்த 14 புகுதிகளில் புக்கிட் லாருட் ஒன்றாக திகழ்கின்றது”
- புக்கிட் அந்தர பங்சாவில் நிகழ்ந்த அந்த அசம்பாவிதம் மீண்டும் நமக்கு நிகழ வேண்டாம்

**3) காக்கப் படும் காட்டுத்தளம்**

- 1910-இல் 7130 ஏக்டர் நில பரப்பளவு பகுதி “காக்கப்படும் காட்டுத்தளமாக” அமைந்தது.
- தேசிய அரசாங்கமும் புக்கிட் லாருட் மலைப்பகுதி, இங்கே உள்ள இயற்கை இயல்களுக்கு விளைவுகள் ஏற்படாது என்பதற்கு உத்திரவாதம் அளித்துள்ளது. மலேசிய பயனீட்டாளர் சம்மேளனம் (FOMCA) & WWF 1997-இல் இப்பகுதியை மையமாக கொண்டு பல ஆய்வுகளையும் ஆலோசனைகளையும் செய்துள்ளது.
- ஐக்கிய நாட்டு சபைகளின் அமைப்பின் ஆய்வின் படி புக்கிட் லாருட் மலைப்குதி பல அரிய தாவர வகைகள் கொண்ட பகுதியாக கருதப் படுகிறது. பல வித உயிர்களின் இருப்பிடமாகவும் புக்கிட் லாருட் பகுதி திகழ்கின்றது.
- ஒரு வேளை, மேம்பாட்டு திட்டங்கள் இங்கு மேற்கொள்ளப் பட்டால், இந்த பல வித உயிர்களின் இனம் அழியக் கூடும் அல்லது சூறையாடப் படும்

**4) சுற்றுப்பயணிகளினால் திடகழிவுகளின் விழுக்காடு அதிகரிக்கும்**

- கேபல் கார் திட்டம் மேற்கொள்ளப்பட்டால், சுர்றுப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதனால் இவ்வட்டாரத்தைச் சுற்றி தூய்மை கேடும் திட கழிவுகளின் வெளியாக்கமும் அதிகரிக்கும். பிறகு இதனை நிர்வாகிப்பதற்குத் தனியாக இடங்களை ஒதுக்க வேண்டும்.